## கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் ஈரோடு அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்:திரு.கி.ஹரிஹரன், எம்.காம்., எச்.டி.சி.எம்.,
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்,
ஈரோடு.

ந.க.1140/2019/அ.ப.அ.1 நாள்: 28 .06.2021

பொருள் : பணியமைப்பு - திருமதி.ப.கோமதி, இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு CCSE குழு-IV - நேரடி இளநிலை உதவியாளர் தெரிவுப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.1016/PSD-G2/2019, நாள்:16.02.2019.

2.கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.33233/2018/அ.ப.அ.2, நாள்: 22.02.2019.

3.கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், ஈரோடு அவர்களின் செயல்முறை ஆணை ந.க.1140/2019/அ.ப.அ.1, நாள்:25.02.2019.

4.திருமதி.ப.கோமதி, இளநிலை உதவியாளரின் பணிசேர் அறிக்கை நாள்:01.03.2019.

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவால் Combined Civil Services Examination தொகுதி-IV பணிகளுக்கான (2015-16, 2016-17, & 2017-18) ஆண்டுகளுக்கான தேர்வின் மூலம் இளநிலை உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு, பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின்படி, திருமதி.ப.கோமதி கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார்.

பார்வை (2)-ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யும் பொருட்டு, இவ்வலுவலக கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, பணிநியமனம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் 01.03.2019 முற்பகல் ப1 பிரிவு/இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 01.03.2019 முற்பகல் முதல் "பார்வை (2)-ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ளவாறு, இந்த நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், இவரது பணிவரன்முறை சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் நீதிப்பேராணையின் மீதான தீர்ப்புக்குட்பட்டதாகும்" என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

28/06/21

கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்
ஈரோடு

28/06/2021

28/6/2021

**பெறுநர் :**

திருமதி.ப.கோமதி, இளநிலை உதவியாளர்

**நகல் :**

1.கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை-35 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2.கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், கோவை மண்டலம், கோவை-18 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3.பணிப்பதிவேட்டிற்கு.